Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 155 of 2024

DATE : 03.06.2025

Depositions of witness for Prosecution

PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | ரதமணி | Caste | |
| Father/Husband's Name | முத்துராஜா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of June 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் அமச்சியார்புரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். வழக்கின் எதிரியையும் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

1) கடந்த 17.03.2022ம் தேதி இரவு சுமார் 7.30 மணியை போல நானும் முத்தையாவும் அவரது மனைவியும் அவரது வீட்டிற்கு முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தததாகவும் அப்போது அ.சா.1 அமச்சியார்அம்மன் கோவிலுக்கு அருகில் போன் பேசிக் கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கே வந்த வழக்கின் எதிரி அ.சா.1 ஐ பார்த்து தகாத வார்த்தையால்பேசிக்கொண்டே இடுப்பில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து அ.சா.1 ஐ தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும் சத்தம் கேட்டு நானும் முத்தையாவும், முத்தையா மனைவியும் விலக்கிவிட்டதாகவும் அப்போது வழக்கின் எதிரி கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும் அப்போது தகவல் தெரிந்து

வந்த அ.சா.1ன் அப்பா அ.சா.1ஐ ஆட்டோவில் ஏற்றி சிகிச்சைக்காக வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் நடந்த சம்பவத்திற்காக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரிந்து கொண்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : – இல்லை**

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு